OS 178/2022 தேதி 17.04.2026

PW2– பின்னியப்பன் த/பெ கூழ்மாயன்

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகள் எனக்கு உறவினர் பங்காளி முறையாகும். பிரதிவாதிகளை எனக்கு தெரியும். வழக்கின் சர்வே எண் தெரியுமா என்றால் 27/8, மொத்தம் 96செண்டுகள் ஆகும். வடக்கில் கருத்தக்கண்ணன் தேவர் வகையறா, தெற்கே ஊரணி, கிழக்கே வண்டிபாதை, மேற்கே கோவில் நிலம் ஆகும். தாவா சொத்து முதலில் வேடத்தேவருக்கு பாத்தியப்பட்டது. அதன்பின்பு பெரியகருப்பத்தேவருக்கு பாத்தியப்பட்டது. அதன்பின்பு கோடாங்கி பெரியகருப்பத்தேவருக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்து சம்பந்தமாக செட்டியார் வகையறாவினர் வாதி வகையறாவினர் மீது வழக்கு போட்ட விபரம் தெரியும். அய்யர்தேவர் என்பவர் நீதிமன்றத்தின் மூலம் தாவா சொத்தை ஏலத்தில் எடுத்தார்.அவர் பின்பு நாகதேவர் என்பவருக்கு ஒத்தி வைத்தார். நாகதேவர் அதை அனுபவிக்கவில்லை. பெரியகருப்பத்தேவர் அனுபவம் செய்து வந்தார். மேற்படி நீதிமன்ற ஏலம் மற்றும் ஒத்தி வைத்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. அய்யர்தேவர் ஏலத்தில் எடுத்து அவரது அனுபவத்தில் இருந்து சொத்தை ஒத்திக்கு வைத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்கள் முன்னோர்கள் மாலைபட்டியை சேர்ந்தவர்கள். வாதிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அய்யர்தேவர் ஒத்தி வைத்த சொத்தை மீட்டு அவர் அனுபவித்து அவருக்கு பின்பு அவருடைய வாரிசுகளான பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமானது வாதிகள் உறவினர்களாக இருந்ததால் அவர்களுடன் சேர்ந்து மோசடியாக மேற்படி தானப்பத்திரத்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கோடாங்கி பெரியகருப்பத்தேவர் பெயரில் தவறாக பட்டா இருந்ததை பயன்படுத்தி மேற்படி தானப்பத்திரத்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடன் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று ஞாபகமில்லை. மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் வாதிகள் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல.

2) 1969ம் வருடம் இருந்து ஒத்தியை மீட்டு கோடாங்கி பெரியகருப்பத்தேவர் அனுபவம் செய்து வருகிறார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன என்றால் சரியல்ல. ஏலத்தின் அடிப்படையில் அய்யர்தேவர் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டு இன்றுவரை தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றும் நான் வழக்கிற்காக

வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒத்தியை திருப்பி நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று அய்யர்தேவர் பெரியகருப்பத்தேவரிடம் சொன்னார். அது எனக்குநேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. கேள்விப்பட்டேன், பத்திரத்தின் பின்புறம் எழுதி கையெழுத்து போட்டுள்ளேதை நான் பார்த்துள்ளேன். ஒத்தியை திரும்பும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. ஒத்தி பத்திரத்தை மீட்டும் போது அய்யர்த்தேவர் கையொப்பம் செய்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. பத்திரத்தில் அவர் பெயர் உள்ளதை வைத்து சொல்கிறேன்.

S.d. Pinniyappan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.